DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 844/2020** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | :சுயம்பு |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 21.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 21 May 2026.

**எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது பாளையங்கோட்டையில் வசித்து வருகிறேன். எதிரியை தெரியும். நான் இந்திய ஒன் என்ற ATM கம்பெனியில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட பராமரிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் வேலைசெய்து வருகிறேன். நகரத்தில் உள்ள ATM உடைக்கப்பட்டிருந்ததாக என்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

கடந்த 21.10.2017–ம் தேதி காலை 7.00 மணிக்கு நகரத்தை சேர்ந்த துரைராஜ் என்பவர் எனக்கு போன் மூலம் எனக்கு நகரத்தில் உள்ள இந்திய ஒன் ATM அடையாளம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு உள்ளது என்று எனக்கு தகவல் சொன்னார்கள் என்றும் மேற்படி தகவலின் அடிப்படையில் நான் நகரம் சென்று உடைக்கப்பட்டிருந்த ATM–பை பார்த்துவிட்டு காவல்நியைலம் சென்று புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார் மனுவை நான்தான் எழுதிகொடுத்தேன் என்றால் சரியல்ல. ATM–ல் உள்ள கேமிராவில் பதிவான பதிவுகளை CD–யாக பதிவு செய்து போலிசிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியாகாது.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.